# தமிழ் வளர்ச்சிக் கழகம்

## செய்தி மின் மடல்

தனிச் சுற்றுக்கு மட்டும்
2 : 3 மார்ச் 2026

### உங்களுடன்

வணக்கம்.
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு மு.க.ஸ்டாலின் அவர்கள்
தமிழ்நாடு அரசின் வழி
வழங்கியிருக்கும் நிதி உதவியில்
தமிழியல் கலைக்களஞ்சியம்
இரண்டு தொகுதிகள் தயாராகி வருகின்றன.
அறங்காவல் குழுத் தலைவர்
மேனாள் ஒன்றிய நிதி அமைச்சர்
மாண்பமை ப.சிதம்பரம் அவர்கள்
வழிகாட்டுதலில்
தமிழியல் கலைக்களஞ்சியம்
ஒவ்வொன்றும் 1000 பக்கங்களோடு
இரண்டு தொகுதிகளாக
விரைவில் வெளிவர இருக்கின்றன!
இன்றையத் தொழில் நுட்பம் இல்லாத
அந்தக் காலத்தில்
மேற்கொள்ளப்பட்டிருக்கிற
கலைக்களஞ்சியப் பணிகள்,
வியப்பின் விளிம்புக்கே
நம்மைக் கொண்டு செல்கின்றன.
கலைக்களஞ்சியம் 10 தொகுதிகளின்
தமிழியல் தொடர்பான பதிவுகள்
வெளிவருகின்றன!
தமிழ் அறிஞர்கள், ஆசிரியர்கள்,
மாணவர்கள், பொதுமக்கள் அனைவரும்
எளிதில் பயன்படுத்திப் பயன்கொள்ள
வாய்ப்பளிக்கும்!
இக்கலைக்களஞ்சியத்தில்
புதுமைப்பித்தன் பற்றி மீ.ப.சோமசுந்தரம்,
கௌதம் புத்தர் குறித்து சர்வ பள்ளி
இராதாகிருஷ்ணன்,
பாரதியார் குறித்து பி.ஸ்ரீ.ஆச்சார்யா,
காந்தி குறித்து வெ.இராமலிங்கம் பிள்ளை
எழுதியுள்ள கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.
ச.வையாபுரிப் பிள்ளை, ஆ.பூவராகம் பிள்ளை,
ரா.பி.சேதுப்பிள்ளை, தெ.பொ.மீ.,
க.வெள்ளைவாரணன், மு.வரதராசனார்,
கி.வா.ஜகந்நாதன், மு.அருணாசலம்,
சி.கணபதிப்பிள்ளை (இலங்கை) போன்ற
அறிஞர் பெருமக்கள் கட்டுரைகளும்
இடம்பெற்றுள்ளன..
பத்துத் தொகுதிகளிலும் இருக்கும்
தமிழியல் தொடர்பான கட்டுரைகளைக்
கண்டறிந்து பட்டியலிடுவது,
பிறகு கட்டுரைப் பக்கங்களைப்
படப்படி எடுப்பது,
எடுத்த பக்கங்களை ஒப்பு நோக்குவது,
மெய்ப்பு திருத்துவது,
அகர வரிசையில்
ஒருங்கிணைத்து, வடிவமைப்பது என்று
பணிகள் நீண்டன.
இந்தப் பணியைத் தொடங்கும்போது
எதிர் நோக்கிய சிக்கல்களைவிட,
பணிகளைத் தொடரும்
ஒவ்வொரு கட்டத்திலும் சிக்கல்கள்
முளைத்துக் கொண்டே இருந்தன.
எல்லாவற்றையும்
இயன்றவரை எதிர்கொண்டு வெளிவருகின்றன
தமிழியல் கலைக்களஞ்சியத் தொகுதிகள்!

மேலும் ஒரு நற்செய்தி
2010 இல் கோவையில் நடந்த
செம்மொழி மாநாட்டுக் கட்டுரைகள்
2011 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதமே
10 தொகுதிகளாக வெளிவந்திருந்த போதும்
யாருக்கும் கிடைக்காத வகையில்
முடக்கப்பட்டிருந்த
1000 கட்டுரைகள், 10,000 பக்கங்கள்
தமிழ் வளர்ச்சிக் கழக முன்னெடுப்பில்
தமிழ் வளர்ச்சித்துறை அரசு செயலாளர்
இயக்குநர் ஆகியோர் ஆதரவுடன்
மாணவர் நகலகத்தின் துணையுடன்
அறங்காவல் குழு உறுப்பினர்
திரு சௌரிராசன் அவர்களின் விடாமுயற்சியில்
விரைவில் வரவுள்ளன பொதுவெளிக்கு!
எனவே
தொடர்பில் இருப்போம்
தொடர்ந்து பயணிக்க...

அன்புடன்
ம.ரா.

## ஆலோசனைக் கூட்டம்

தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் ஆறங்காவலர் குழுக் கூட்டம் மேனாள் ஒன்றிய நிதி அமைச்சர் மாண்பமை திரு. ப.சிதம்பரம் அவர்களின் தலைமையில் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் புதுபிக்கப்பட்ட அறையில் 02.03.2026 முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்றது. முனைவர் ம. இராசேந்திரன், குறள்நெறிச் செல்வர் கிருஷ்ணசந்த் சோர்டியா, பத்மபூஷன் நல்லி குப்பூசாமி, திரு. சௌரிராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அறங்காவல் குழு மற்றும் ஆட்சிக் குழுவின் பொருளாளராக இருந்த மறைந்த பேராசிரியர் வ.ஜெயதேவன் அவர்களின் பணிகளை நினைவு கூர்ந்ததோடு புதிய பொருளாளராகப் பேராசிரியர் சா.சரவணன் அவர்கள் அறங்காவல் குழுவால் ஒருமனதாக நியமிக்கப்பட்டார்.



மாணவர் அகராதி – செயல் திட்டம் பணிகள் தொடர்பாக 11.03.2026 அன்று தமிழ் வளர்ச்சிக் கழகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் உள்ளடக்கச் சொற்களின் பட்டியல், தலைச்சொற்கள் தெரிவுசெய்து வகைப்படுத்தல், தொடரடைவு தயாரித்தல், பதிவுக்கட்டமைவு போன்றன குறித்தும் அதன் மீதான முன்னேற்ற நிலை குறித்தும் விரைந்து செயலாக்கம் செய்து முடித்திடல் குறித்தும் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன. 31.03.2026 க்குள் இத்திட்டத்தின் முதன்மைப் பணிகளை முடிக்கத் திட்டப் பணியாளருக்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

# சொல்புதிது 11

தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் சொல் புதிது என்னும் திட்டத்தின் பதினோராவது கூட்டம் தமிழ் வளர்ச்சிக் கழக அலுவலகத்தில் 18.03.2026 புதன்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்றது. இக்கூட்டத்தில் இறுதி செய்யப்பெற்ற சொற்கள் பின்வருமாறு:

| வ. எண் | ஆங்கிலம் | தமிழ் |
|---|---|---|
| 1 | Bewilderness | திகைப்பு நிலை |
| 2 | Biodiesel | உயிரி டீசல் |
| 3 | Brain fog | மூளை மந்தம் |
| 4 | Co-axial | இணை அச்சு |
| 5 | Course work | பாடத்திட்டப்பணி |
| 6 | Delulu | மாய்மாலர் |
| 7 | Drinkware | அருந்துகலன் |
| 8 | Geopolitical | புவியரசியல் |
| 9 | Gig works | சிறுகுறு பணிகள் |
| 10 | Hosting | ஆக்கத்துணை |
| 11 | Hybrid ATM | பலவகைப் பணப்பணிப்பொறி |
| 12 | Kitchenware | அடுகலன் |
| 3 | Leg day | கால்தசைப் பயிற்சி நாள் |
| 14 | Mouse jiggler | சுட்டி அசைப்பான் |
| 15 | Paperwork | ஆவணப்பணி |
| 16 | Plasticware | நெகிழிக்கலன் |
| 17 | Power laundry | மின் சலவையகம் |
| 18 | Preschool | முன்பயிற்சிப் பள்ளி |
| 19 | Side-eye | வெறுப்பு நோக்கு |
| 20 | Spot visit | கள ஆய்வுப் பணி |
| 21 | Tableaux | நிலைக்காட்சி |
| 22 | Telecaller | பணிநோக்கு அழைப்பாளர் |
| 23 | Tours & travels | சுற்றுலா & பயணப்பணி |
| 24 | Tradwife | இல்லாள் / வாழ்க்கைத் துணை |
| 25 | TTR | பயணச்சீட்டுக் கண்காணி |
| 26 | Unfreeze | முடக்கம் நீக்கு/முடக்க நீக்கம் |
| 27 | Water service | நீர்வழித் தூய்மை |
| 28 | Welding works | பற்றவைப்புப் பணி |
| 29 | Wood works | தச்சுப்பணியகம் |
| 30 | Work wife | பணியிடத் துணை |

இக்கூட்டத்திற்குத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் முனைவர் ம.இராசேந்திரன் தலைமை தாங்கினார். இக்கூட்டத்தில் பேராசிரியர்கள் சா.சரவணன், கஸ்தூரிராஜா, பாரதி பாலன், விசயலட்சுமி இராமசாமி, தி.கமலி, ஊடகவியலாளர்கள் திருவாளர்கள் ராஜ் கண்ணன், மு.முருகேசன், நீச்சல்காரன் இராஜாராமன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

எந்தெந்த ஆங்கிலச் சொற்களுக்கு நிகராகத் தமிழில் சொற்கள் உருவாக்கப்பட வேண்டுமோ அந்த ஆங்கிலச் சொற்களை எவரும் அனுப்பலாம்.



## கலந்துரையாடல்

25.03.2026 அன்று தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் வலைத்தள மேம்பாடு குறித்த கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. வலைத்தளத்தில் மேற்கொள்ள வேண்டிய சீரமைப்புப் பணிகள் குறித்து வலைத்தள பணியாளர்களுடன் கலந்துரையாடி மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்தும் ஆற்றுப்படுத்தப்பட்டன.

27.03.2026 அன்று தமிழ் வளர்ச்சிக் கழக ஆட்சிக் குழுத் தலைவர் பொருளாளர் ஆகியோர் கலந்துகொண்ட நிருவாகக் கூட்டம் நடைபெற்றது. 2025-26 ஆம் ஆண்டின் பணிகள் குறித்த ஆய்வு நிதி நிலை மற்றும் தமிழியல் கலைக்களஞ்சியம் அச்சுப் பணி தொடர்பாகவும் அதனை விரைவுபடுத்தல் பணியினை முடுக்கி விடுதல் குறித்தும் அறிவுறுத்தப்பட்டது.





விரைவில்

ஒவ்வொரு தொகுதியும் 1000 பக்கங்களுக்கு மேல்

**தமிழியல் கலைக்களஞ்சியம்**

தொகுதி 1 ரூ.1000

தொகுதி 2 ரூ.1000

## நூல் விற்பனை (50% கழிவுடன்)

தமிழ் வளர்ச்சிக் கழகம் வெளியிட்டுள்ள அனைத்து நூல்களும் (தமிழியல் கலைக்களஞ்சியம், நாடகவியல் களஞ்சியம் நீங்கலாக) 50% சிறப்புக் கழிவுடன் விற்பனை செய்யப்படுகின்றன.




ரூ.750 விலையுள்ள

**நாடகவியல் களஞ்சியம்**

ரூ.500க்குக் கிடைக்கும்.



தொடர்புக்கு:

தமிழ் வளர்ச்சிக் கழகம்

சென்னைப் பல்கலைக்கழக வளாகம்

சேப்பாக்கம், சென்னை 600 005

தொலைபேசி: 044-25365440, இணைய வலைத்தளம்: www.tamilvk.org

மின்னஞ்சல்: tamilvalarchikazhagam2024@gmail.com